சுருக்கம்

வருவாய் நிருவாகம் – ஆட்சி எல்லை – கன்னியாகுமரி மாவட்டம் – கல்குளம் வருவாய் வட்டத்தினைப் பிரித்து செருப்பாலூரை தலைமையிடமாகக் கொண்டு திருவட்டார் புதிய வருவாய் வட்டம் உருவாக்குதல் –ஆணை – வெளியிடப்படுகிறது.

---

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி.1(1) பிரிவு

அரசாணை (நிலை) எண்.40 நாள்: 07.02.2019,

விளம்பி வருடம், தை 24,
திருவள்ளுவர் ஆண்டு 2050.

படிக்கவும்:–

1. அரசாணை (நிலை) எண்.279, வருவாய்த் [வ.நி.1(1)] துறை, நாள் 9.6.2003.
2. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண்.ந.க.பணி 3(4)/26733/2018, நாள் 28.10.2018.

*********

ஆணை:

கன்னியாகுமரி மாவட்டத்தில் 22.09.2018 அன்று தமிழ்நாடு அரசு சார்பில் நடைபெற்ற பாரத ரத்னா டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை தொடர்பாக கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

**"கல்குளம் வட்டத்தினை பிரித்து செருப்பாலூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய திருவட்டார் வருவாய் வட்டம் அமைக்கப்படும் "**

2. மேற்காணும் அறிவிப்பிற்கிணங்க, பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் தனதறிக்கையில், கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்குளம் வட்டத்தின் தலைமையிடமான தக்கலை, நாகர்கோவிலிலிருந்து சுமார் 17 கி.மீ. தொலைவில் உள்ளது எனவும், கல்குளம் வட்டம், குளச்சல் மற்றும் பத்மனாபபுரம் என்ற இரு சட்டமன்றத் தொகுதிகளையும், தக்கலை, குருந்தன்கோடு மற்றும் திருவட்டார் ஆகிய மூன்று ஊராட்சி ஒன்றியங்களையும், பத்மனாபபுரம் மற்றும் குளச்சல் என்ற இரு நகராட்சிகளையும், 26 கிராம ஊராட்சிகளையும் மற்றும் 23 பேரூராட்சிகளையும் உள்ளடக்கியதாக உள்ளது என்றும், கல்குளம் வட்டத்தின் எல்லை, வடக்கில் மலைப்பகுதிகளான கோதையாறு, பேச்சிப்பாறை முதல் தெற்கே கடல் பகுதிகளான முட்டம், குளச்சல் வரையிலும் சுமார் 60 கி.மீ வரை உள்ளது எனவும், இவ்வட்டத்தின் மொத்தப் பரப்பு 595.32 ச.கி.மீ. ஆகும் என்றும், 2011–ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, கல்குளம் வட்டத்தின் மக்கள் தொகை 6,06,706 ஆகும் என்றும், இவ்வட்டத்தில் 245 நியாய விலைக் கடைகளும், அவற்றின் கீழ் 1,76,423 குடும்ப அட்டைகளும் உள்ளன என்றும் குலசேகரம் குறுவட்டத்திற்குட்பட்ட கோதையாறு, பேச்சிப்பாறை மற்றும் பெருஞ்சாணி பகுதி மலைவாழ் மக்கள் சான்றுகள் மற்றும் குடும்ப

//த.பி.பா.//

அட்டைகள் குறித்த தங்களது அத்தியாவசிய தேவைகளுக்காக, தக்கலை வருவதற்கான காலவிரயத்தை குறைக்கவும், பேரிடர் காலங்களில் பிற துறைகளை ஒருங்கிணைத்து செம்மையாக செயல்படவும், சட்ட ஒழுங்கு பிரச்சினை தொடர்பான நேர்வுகளில் திறம்பட செயல்படவும், செருப்பாலூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய திருவட்டார் வட்டம் உருவாக்குவது அவசியமாக உள்ளது என்றும், இயற்கை பேரிடர் காலங்களில் வட்ட அளவில் நிர்வாக செயல்திறனை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் காரணமாகவும், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரின் முன்மொழிவு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, 12.10.2018 அன்று திருவட்டார் புதிய வருவாய் வட்டம் உருவாக்குவதற்கான உயர்மட்டக்குழுவின் ஆய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

3. மேலும், கல்குளம் வட்டதிலிருந்து உத்தேசிக்கப்பட்டுள்ள திருவட்டார் புதிய வருவாய் வட்டத்தை பிரித்த பின்னர், எஞ்சியுள்ள கல்குளம் வட்டம் குறைந்தபட்ச பரப்பளவான 250 ச.கி.மீ.–க்கும் குறைவாக 249.29 ச.கி.மீ பரப்பளவு மட்டுமே உள்ளது என்றும், உத்தேசிக்கப்பட்டுள்ள திருவட்டார் புதிய வருவாய் வட்டத்தில், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் வருவாய் கிராமங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை, பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் வரையறுக்கப்பட்டுள்ள அளவுகோல்களின்படி பூர்த்தியாகவில்லை என்றும், எனினும் மேற்படி அரசாணையில், கன்னியாகுமரி மாவட்டத்திற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ள நிலையில், நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்கள் இம்மாவட்டத்திற்கு பொருந்தாது என்பதால், இதனை சிறப்பினமாகக் கருதி கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரின் முன்மொழிவினை ஏற்றுக்கொண்டு, செருப்பாலூரைத் தலைமையிடமாகக் கொண்டு திருவட்டார் புதிய வருவாய் வட்டம் உருவாக்க உயர்மட்டக்குழு பரிந்துரை செய்துள்ளது என்றும், மேலும், திருவட்டார் குறுவட்டத்தினைப் பிரித்து ஆற்றூர் என்ற புதிய குறுவட்டம் உருவாக்கப்பட்ட பின்னர் தனியே பரிசீலிக்கலாம் எனவும் உயர்மட்டக்குழு பரிந்துரைத்துள்ளது என்றும், மேலும், மலைவாழ் பகுதி மக்களுக்கு அரசின் வளர்ச்சித்திட்டம் மற்றும் நலத்திட்டங்களைப் பெறுவதில் ஏற்படும் காலதாமதத்தை குறைக்கவும், நிர்வாக செயல்திறனை மேம்படுத்தவும், கல்குளம் வட்டத்தினைப் பிரித்து 2 குறுவட்டங்கள் மற்றும் 21 வருவாய் கிராமங்களுடன் செருப்பாலூரைத் தலைமையிடமாகக் கொண்டு திருவட்டார் புதிய வருவாய் வட்டம் உருவாக்கலாம் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளதாக கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

4. மேலும், தற்போதைய கல்குளம் வட்டம் மற்றும் புதிதாக உருவாக்கப்படும் திருவட்டார் வட்டம் ஆகியவற்றின் ஆட்சி எல்லைகள் (இணைப்பு –III) தொடர்பான அடிப்படை விவரங்களை தெரிவித்துள்ளார். மேலும், உருவாக்கப்படவுள்ள திருவட்டார் வட்டத்திற்கு பொதுப்பிரிவு, சமூகப் பாதுகாப்புத் திட்டம், தேர்தல் பிரிவு, வட்ட வழங்கல் பிரிவு, கிராம நிருவாகம், நில அளவை பிரிவு ஆகிய பிரிவுகளுக்கு மொத்தம் 23 பணியிடங்கள் உருவாக்கிட ஒப்பளிப்பும், ஓராண்டிற்கான தொடரும் செலவினமாக ரூ.1,55,43,564/–ம் தொடராச் செலவினமாக ரூ.28,49,446/–ம் ஒப்பளிப்பு செய்து வழங்கிடுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

(i) கன்னியாகுமரி மாவட்டத்தில், கல்குளம் வருவாய் வட்டத்தைப் பிரித்து செருப்பாலூரை தலைமையிடமாகக் கொண்டு குலசேகரம் மற்றும் திருவட்டார் ஆகிய இரு குறுவட்டங்கள் மற்றும் 21 வருவாய் கிராமங்களுடன் திருவட்டார் புதிய வருவாய் வட்டம் உருவாக்கப்படுகிறது.

(ii) திருவட்டார் புதிய வருவாய் வட்டத்திற்கு உருவாக்கப்படவுள்ள 78 பணியிடங்களில் 61 பணியிடங்களை மறுபரவலமர்த்தல் மூலமும், 13 பணியிடங்களை வருவாய்த் துறைக்கும், 4 பணியிடங்களை நில அளவைத்துறைக்கும் ஆக மொத்தம் 17 பணியிடங்களை (இணைப்பு 1a–இல் உள்ளபடி) புதியதாக உருவாக்குவதன் மூலமும் தோற்றுவிக்கப்படுகிறது. மேலும், ஏற்கனவே செயல்பட்டு வரும் கல்குளம் வட்டத்திற்கு 4 புதிய பணியிடங்களை (இணைப்பு 1b–இல் உள்ளபடி) தோற்றுவிக்கப்படுகிறது.

(iii) திருவட்டார் புதிய வருவாய் வட்டத்திற்கு ஒரு வருடத்திற்கு தோராயமாக ஏற்படும் தொடரும் செலவினம் **ரூ.1,55,43,064/–** (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்தைந்து இலட்சத்து நாற்பத்தி மூன்றாயிரத்து அறுபத்து நான்கு மட்டும்) மற்றும் தொடராச் செலவினமாக **ரூ.18,91,000/–** (ரூபாய் பதினெட்டு இலட்சத்து தொண்ணூற்று ஓராயிரம் மட்டும்) கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு நிதி ஒப்பளிப்பு செய்யப்படுகிறது. மேலும், ஏற்கனவே செயல்பட்டு வரும் கல்குளம் வட்டத்திற்கு புதியதாக உருவாக்கப்படவுள்ள 4 பதவிகளுக்கான பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள் தொடர்பாக ஆண்டொன்றுக்கு தோராயமாக **ரூ.19,14,924/–** (ரூபாய் பத்தொன்பது இலட்சத்து பதினான்காயிரத்து தொள்ளாயிரத்து இருபத்து நான்கு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

அ) தொடரும் செலவினங்கள்:–

| வ. எண். | விபரம் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள் (தோராயமாக ஆண்டொன்றுக்கு (கணக்கீட்டுத்தாளில் உள்ளபடி) | 1,52,06,064 |
| 2. | அலுவலக கட்டிட வாடகை (பொதுப் பணித்துறையின் பரிந்துரையின் பேரில் நிர்ணயம் செய்யப்படும்) | 0 |
| 3. | மின்சாரக் கட்டணம் | 1,20,000 |
| 4. | எரிபொருள் (டீசல்) (2 வாகனங்களுக்கு) | 1,92,000 |
| 5. | தொலைபேசி கட்டணம் | 25,000 |
| | மொத்தம் | **1,55,43,064** |

ஆ) தொடராச் செலவினங்கள்:-

//த.பி.பா.//

| வ. எண். | விபரம் | தொகை |
|---|---|---|
| 1. | தளவாடங்கள் | 4,00,000 |
| 2. | ஈப்பு –2 | 12,70,000 |
| 3. | தொலைபேசி இணைப்பு | 6,000 |
| 4. | கணினி | 75,000 |
| 5. | பிரிண்டர் (அச்சுப் பதிப்பு இயந்திரம்) | 30,000 |
| 6. | ஜெராக்ஸ் இயந்திரம் | 65,000 |
| 7. | பேக்ஸ் இயந்திரம் (தொலையச்சு இயந்திரம்) | 10,000 |
| 8. | குளிர்சாதனம் | 25,000 |
| 9. | தீயணைப்பான் | 10,000 |
| | **மொத்தம்** | **18,91,000** |

(v) குரூப் கிராமங்களை பிரித்து புதியதாக குரூப் கிராமங்களை உருவாக்குதல் தொடர்பாக நடைமுறையில் உள்ள விதிமுறைகள், சட்டம் மற்றும் அரசாணைகள் பின்பற்றப்பட வேண்டும்.

(vi) இரவுக் காவலர், மசால்சி, புல உதவியாளர் போன்ற பணியிடங்கள் அரசு ஆணை (நிலை) எண்.49, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, நாள் 14.5.2002–இன்படி வெளிமுகமை (outsourcing) மூலமாக ஒப்பந்த (contract) அடிப்படையில் நிரப்பப்பட வேண்டும்.

(vii) அலுவலக உதவியாளர் பணியிடங்களை தமிழ்நாடு அடிப்படைப்பணிக்கான சிறப்பு விதிகளில், விதி–4(a) (நியமனம்)–ஐயும், அரசாணை (நிலை) எண்.44, தொ(ம)வே.வா.துறை, நாள் 11.03.2015–ஐயும் உடன் நிகழ்வாக பின்பற்றப்படுவதுடன், நடைமுறையில் உள்ள உரிய விதிகள்/ சட்டம்/ அரசாணைகளை பின்பற்றி நிரப்பப்பட வேண்டும்.

(viii) மறுபரவலமர்த்தல் மூலம் கல்குளம் வருவாய் வட்டத்திலிருந்து திருவட்டார் புதிய வருவாய் வட்டத்திற்கு மாற்றப்பட வேண்டிய பணியிடங்கள் அப்பணியிடங்களுக்குரிய தளவாடங்களுடன் மாற்றம் செய்யப்பட வேண்டும்.

(ix) இது ஒரு "புதுத்துணைப்பணி" குறித்த செலவினமாகும் என்பதால் புதுதுணைப்பணி தொடர்பான நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

(x) ஏற்கனவே உள்ள வட்டங்களில், வட்டப் பிரிவினைக்குப்பின் உள்ள பணியிடங்கள் பொதுவான பணியாளர் மாதிரியில் (Generalized Staff Pattern) வரையறுத்துள்ளவற்றிற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

(xi) அவ்வாறு மிகைப்பணியிடமாக கண்டறியப்பட்ட பணியிடங்கள் அரசுக்கு சரண் செய்யப்பட வேண்டும் அல்லது தேவைப்படும் இடங்களுக்கு மாற்றம் செய்யப்பட வேண்டும். இல்லையெனில், புதிய வருவாய் வட்டம் துவக்கப்பட்டவுடன் அப்பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக வைக்கப்பட வேண்டும். அப்பணியிடங்களுக்கு சம்பளம் பெற்று வழங்கக் கூடாது.

(xii) அலுவலகத்திற்கான வாடகை பொதுப்பணித்துறை பரிந்துரையின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டு பெற்று வழங்க வேண்டும்.

**6.** மேலே பத்தி 5–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினங்கள் பின்வரும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

## I <u>பணியாளர் சம்பளங்கள்</u>

(i) <u>வருவாய் பணியிடங்கள்</u>
**2053–00** மாவட்ட நிருவாகம் – **094** ஏனைய பணியாளரமைப்பு – மாநிலச் செலவினங்கள் –AB வட்டப் பணியாளரமைப்புகள் – **01** சம்பளங்கள் (த.தொ.கு **2053 00 094** AB **0102**)

சம்பளம் மற்றும் தகுதியுள்ள பிறபடிகள் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட மறுபரவலமர்த்தப்பட்ட பணியிடங்களுக்கு கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பு / உப தலைப்புகளில் பற்று வைக்கப்படும்.

(ii) <u>தேர்தல் பணியிடங்கள்</u>
**2053–00** மாவட்ட நிருவாகம் – **094** ஏனைய பணியாளரமைப்பு – மாநிலச் செலவினங்கள் –AB வட்டப் பணியாளரமைப்புகள் – **01** சம்பளங்கள் (த.தொ.கு **2053 00 094** AB **0102**)

(iii) <u>நில அளவைப் பணியிடங்கள்</u>
**2029–00** நில வருவாய் – **102** நில அளவை நிலவரி ஏற்பாட்டுப் பணிகள் – மாநிலச் செலவினங்கள் – AF நில அளவை பராமரிப்பு பணி – **01** சம்பளங்கள்
(த.தொ.கு **2029 00 102** AF **0105**)

(iv) <u>குடிமைப் பொருள் பணியிடங்கள்</u>
**3456–00** நுகர்பொருள் வழங்கல் – **001** நெறிப்படுத்துதலும் நிருவாகமும் – மாநிலச் செலவினங்கள் AB மாவட்ட பணியாளரமைப்பு – **01** சம்பளங்கள் (த.தொ.கு **3456 00 001** AB **0108**)

**II 2053–00** மாவட்ட நிருவாகம் – **094** ஏனைய பணியாளரமைப்பு – மாநிலச் செலவினங்கள் – **AB** வட்டப் பணியாளரமைப்புகள்

(அ) <u>05 அலுவலகச் செலவுகள் 01 தொலைபேசிக் கட்டணங்கள் ரூ.31,000/–</u>
தொடரும் செலவினம் ரூ.25,000/– மற்றும் தொடராச் செலவினம் ரூ.6,000/– (த.தொ.கு 2053 00 094 AB 0513)

//த.பி.பா.//

(ஆ) 05 அலுவலகச் செலவுகள் – 03 மின் கட்டணங்கள் ரூ.1,20,000/–
(த.தொ.கு 2053 00 094 AB 0531)

(இ) 05 அலுவலகச் செலவுகள் – 05 அறைகலன்கள் ரூ.4,00,000/–
05 அலுவலகச் செலவுகள் 05 அறைகலன்
(த.தொ.கு 2053 00 094 AB 0559)

(ஈ) 06 வாடகை, கட்டண வீதங்கள், வரிகள் 01 வாடகை
(பொதுப்பணித்துறையின் இறுதி திட்ட மதிப்பீட்டிற்கு உட்பட்டது)
(த.தொ.கு 2053 00 094 AB 0611)

(உ) 19 இயந்திரமும் சாதனமும் 01 வாங்குதல் ரூ.1,10,000/–
(த.தொ.கு 2053 00 094 AB 1914)

(ஊ) 21 மோட்டார் வண்டிகள் 01 வாங்குதல் ரூ.12,70,000/–
(த.தொ.கு 2053 00 094 AB 2119)

(எ) 45பெட்ரோலியம் எண்ணெய் மற்றும் மசகெண்ணெய் ரூ.1,92,000/–
(த.தொ.கு 2053 00 094 AB 4500)

(ஏ) 76 கணினியும் துணை பாகங்களும் – 01 வாங்குதல் ரூ.1,05,000/–
(த.தொ.கு 2053 00 094 AB 7614)

7. மேலே பத்தி 5–இல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு புது துணைப்பணியாகும் (New Instrument of Services). இதற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதலில் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ.பொது.1) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். அடுத்த துணை மானிய கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு ஒப்புதல் பெறும்வரை தேவைப்படும் சரியான தொகையினை கணக்கிட்டு எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்பளிப்பு செய்ய தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதி விதிகள் 1963–இன் இணைப்பிலுள்ள படிவம் 'அ'–ன்படி இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வ.செ.பொது.1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை 2018–2019–ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் (Supplementary Estimate) சேர்க்கும்பொருட்டு உரிய வரைவு செயற்குறிப்பினை தவறாமல் உரிய நேரத்தில் நிதி (வருவாய்) துறைக்கு அனுப்பி வைக்குமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வரசாணையின் இணைப்பில் கண்டுள்ள அறிவிக்கைகள் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். இப்புதிய வட்டம் 07.02.2019–ஆம் நாள் முதல் செயல்படும்.

9. திருவட்டார் வட்டம் உருவாக்குவது குறித்து மேலே பத்தி 5–இல் தெரிவிக்கப்பட்டுள்ள ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. இந்த அரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.5060/நிதி (வருவாய்), நாள் 07.02.2019 மற்றும் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.6003/மை.ம.ஆ.பி/2019, நாள் 07.02.2019–இல் பெறப்பட்ட இசைவுடன்

..7..

வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண்.2664 (இரண்டாயிரத்து அறுநூற்று அறுபத்து நான்கு).

(ஆளுநரின் ஆணைப்படி)

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பணி மேலாளர், அரசு மைய அச்சகம்,
சென்னை–600 079. (அரசிதழில் அறிவிக்கை வெளியிடுவதற்காக)
கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–600 005.
கூடுதல் தலைமைச் செயலாளர்/ நில நிர்வாக ஆணையர், சென்னை–600 005.
முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை–600 009.
முதன்மைச் செயலாளர்/ ஆணையர், நகர்ப்புற நிலஉச்சவரம்பு (ம)
நகர்ப்புற நிலவரித்துறை, சென்னை–600 005.
கூடுதல் தலைமைச் செயலாளர்/ நிலச் சீர்திருத்த ஆணையர், சென்னை–600 005.
இயக்குநர், நில அளவை மற்றும் நிலவரித்திட்டம், சென்னை–600 005.
ஆணையர், குடிமைப் பொருள் மற்றும் நுகர்வோர்பாதுகாப்பு, சென்னை–600 005.
மாவட்ட ஆட்சித்தலைவர், கன்னியாகுமரி.
மாவட்ட கருவூல அலுவலர், கன்னியாகுமரி.
மாநில கணக்காயர் (A&E), சென்னை–600 018.
மாநில கணக்காயர் (துணிக்கை), சென்னை–600 018. (பெயரிட்ட உறையில்)
மாநில கணக்காயர் (துணிக்கை), சென்னை–600 018.
மாநில கணக்காயர் (CAG) சென்னை–600 009.
மாநில கணக்காயர் (RAO) சென்னை–600 009.
இயக்குநர், எழுதுபொருள் அச்சுத்துறை, சென்னை–600 002.
அனைத்துத் துறை தலைவர்கள்/ அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
இயக்குநர், தகவல் மற்றும் மக்கள் தொடர்பு, சென்னை–600 009.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை–600 104.
தலைமை தேர்தல் அதிகாரி, பொது (தேர்தல்கள்) துறை, சென்னை–600 009.
ஆணையர், கருவூலக்கணக்கு துறை, சென்னை–600 015.
இயக்குநர், மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநரகம்,
இராஜாஜி பவன், பெசன்ட் நகர், சென்னை–600 090.

<u>நகல்:</u>
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–600 009.
மாண்புமிகு அமைச்சர் (வருவாய் (ம) பேரிடர் மேலாண்மை)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
முதன்மைச் செயலாளர், (வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை)
அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–600 009.
நிதித் (வ.செ.பொது–I/ வ.செ.பொது–II/ வருவாய்/கக–3/ கூ.உ(ம)நுபா/
பொதுப்பணி- I/மை.ம.ஆபி) துறை, சென்னை–600 009.
சிறப்புத் திட்ட அமலாக்கத் துறை, சென்னை–600 009.
இருப்பு கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

## இணைப்பு - I (a)

**அரசாணை (நிலை) எண்.40, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 07.02.2019**
**திருவட்டார் வருவாய் வட்டத்திற்கு புதியதாக ஒப்பளிக்கப்படும் பணியிடங்கள்**

| வ.எண். | பணியிடங்களின் பெயர் | ஊதிய விகிதம் (in pay revised scale) | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| அ | பொதுப்பிரிவு | | |
| 1 | வட்டாட்சியர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.37,700/– நிலை–20, ரூ.37,700/– ரூ.1,19,500/– | 1 |
| 2 | பதிவறை எழுத்தர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.15,900/– நிலை–2, ரூ.15,900/– ரூ.50,400/– | 1 |
| 3 | ஈப்பு ஓட்டுனர் | TEXCO பரிந்துரையின் அடிப்படையில் | 1 |
| 4 | அலுவலக உதவியாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.15,700/– நிலை–1, ரூ.15,700/– ரூ.50,000/– | 1 |
| 5 | இரவுக்காவலர் | அரசாணை (நிலை) எண்.49, ப.ம.நி.சீ. (F) துறை, நாள் 14.05.2002–ன்படி | 1 |
| 6 | மசால்சி | அரசாணை (நிலை) எண்.49, ப.ம.நி.சீ. (F) துறை, நாள் 14.05.2002–ன்படி | 1 |
| ஆ | சமூக பாதுகாப்புத்திட்டம் | | |
| 7 | தனி வட்டாட்சியர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.37,700/– நிலை–20, ரூ.37,700/– ரூ.1,19,500/– | 1 |
| 8 | தட்டச்சர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.19,500/– நிலை –8, ரூ.19,500/– ரூ.62,000/– | 1 |
| 9 | பதிவறை எழுத்தர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.15,900/– நிலை–2, ரூ.15,900/– ரூ.50,400/– | 1 |
| 10 | அலுவலக உதவியாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.15,700/– நிலை–1, ரூ.15,700/– ரூ.50,000/– | 1 |
| 11 | ஈப்பு ஓட்டுனர் | TEXCO பரிந்துரையின் அடிப்படையில் | 1 |
| இ | வட்ட வழங்கல் பிரிவு | | |
| 12 | துணை வட்டாட்சியர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.36,900/– நிலை–18, ரூ.36,900/– ரூ.1,16,600/– | 1 |
| 13 | அலுவலக உதவியாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.15,700/– நிலை–1, ரூ.15,700/– ரூ.50,000/– | 1 |
| ஈ | நில அளவைப்பிரிவு | | |
| 14 | வட்ட துணை ஆய்வாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.35,600/– நிலை–12, ரூ.35,600/– ரூ.1,12,800/– | 1 |
| 15 | வட்ட சார் ஆய்வாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.35,400/– நிலை–11, ரூ.35,400/– ரூ.1,12,400/– | 1 |
| 16 | முதுநிலை வரைவாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.35,400/– நிலை–11, ரூ.35,400/– ரூ.1,12,400/– | 1 |
| 17 | புல உதவியாளர் | அரசாணை (நிலை) எண்.49, ப.ம.நி.சீ. (F) துறை, நாள் 14.05.2002–ன்படி | 1 |
| | மொத்தம் | | 17 |

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

7/2/19

பிரிவு அலுவலர்.

## இணைப்பு - I (b)

**அரசாணை (நிலை) எண்.40, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 07.02.2019 ஏற்கனவே செயல்பட்டு வரும் கல்குளம் வருவாய் வட்டத்திற்கு புதியதாக ஒப்பளிக்கப்படும் பணியிடங்கள்**

| வ.எண். | பணியிடங்களின் பெயர் | ஊதிய விகிதம் (in pay revised scale) | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| அ | சமூக பாதுகாப்புத்திட்டம் | | |
| 1 | தட்டச்சர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.19,500/– நிலை –8, ரூ.19,500/– ரூ.62,000/– | 1 |
| 2 | பதிவறை எழுத்தர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.15,900/– நிலை–2, ரூ.15,900/– ரூ.50,400/– | 1 |
| 3 | அலுவலக உதவியாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.15,700/– நிலை–1, ரூ.15,700/– ரூ.50,000/– | 1 |
| ஆ | நில அளவைப்பிரிவு | | |
| 4 | புல உதவியாளர் | அரசாணை (நிலை) எண்.49, ப.ம.நி.சீ. (F) துறை, நாள் 14.05.2002–ன்படி | 1 |
| | மொத்தம் | | 4 |

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.
7/2/19

## இணைப்பு- II

**அரசாணை (நிலை) எண்.40, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 07.02.2019**
**புதிய திருவட்டார் வருவாய் வட்டத்திற்கான பணியிட விவரங்கள்**

| வ. எண் | பணியிடங்கள் | தற்காலிம் / நிரந்தரம் | கல்குளம் வட்டத்தின் தற்போதைய பணியிடங்கள் | பொதுவான பணியாளர் மாதிரி (Generalized Staff Pattern)யின்படி | | | உத்தேசிக்கப்பட்டுள்ள திருவட்டார் வட்டத்தின் பணியிடங்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | கல்குளம் வட்டத்தில் நிறுத்தி வைக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | கலைக்கப்பட வேண்டிய மிகைப் பணியிடங்கள் | புதிதாக தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | மாறுதல் செய்யப்பட வேண்டிய பணியிடங்கள் | புதியதாக தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | | | (6) | (7) | (8) |
| அ. பொதுப்பிரிவு | | | | | | | | | |
| 1 | வட்டாட்சியர் | நி | 1 | 1 | - | - | - | 1 | 1 |
| 2 | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | நி | 2 | 1 | - | - | 1 | - | 1 |
| 3 | மண்டல துணை வட்டாட்சியர் | நி | 2 | 1 | 0 (1a) | - | - | - | - |
| 4 | முதுநிலை வருவாய் ஆய்வாளர் (உதவியாளர் நிலை) | நி | 8 | 3 | 0 (2=1b+1c) | - | 3 | - | 3 |
| 5 | குறுவட்ட வருவாய் ஆய்வாளர் | நி | 6 | 0 | 6 (***) | - | 0 | - | 0 |
| 6 | இளநிலை வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை) | நி | 5 | 2 | 0 (1d) | - | 2 | - | 2 |
| 7 | தட்டச்சர் | நி | 2 | 1 | - | - | 1 | - | 1 |
| 8 | பதிவறை எழுத்தர் | நி | 1 | 1 | - | - | - | 1 | 1 |
| 9 | ஈப்பு ஓட்டுநர் | நி | 1 | 1 | - | - | - | 1 | 1 |
| 10 | அலுவலக உதவியாளர் | நி | 9 | 6 | - | - | 3 | 1 | 4 |
| 11 | இரவுக் காவலர் | நி | 1 | 1 | - | - | - | 1 | 1 |
| 12 | மசால்ஜி | நி | 1 | 1 | - | - | - | 1 | 1 |
| | மொத்தம் | | 39 | 19 | 6 | 0 | 10 | 6 | 16 |

//த.பி.பா.,

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆ. சமூக பாதுகாப்புத் திட்டப் பிரிவு | | | | | | | | | |
| 1 | தனி வட்டாட்சியர் | நி | 1 | 1 | - | - | - | 1 | 1 |
| 2 | முதுநிலை வருவாய் ஆய்வாளர் (உதவியாளர் நிலை) | நி | 3 | 1 | 1 (***) | - | 1 | - | 1 |
| 3 | இளநிலை வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை) | நி | 1 | 1 | - | - | **1d** (பொது) | 0 | 1 |
| 4 | தட்டச்சர் | நி | - | - | - | 1 | - | 1 | 1 |
| 5 | பதிவறை எழுத்தர் | நி | - | - | - | 1 | - | 1 | 1 |
| 6 | அலுவலக உதவியாளர் | நி | - | - | - | 1 | - | 1 | 1 |
| 7 | ஈப்பு ஓட்டுநர் | நி | 1 | 1 | - | - | - | 1 | 1 |
| | **மொத்தம்** | | **6** | **4** | **1** | **3** | **2** | **5** | **7** |
| இ. தேர்தல் பிரிவு | | | | | | | | | |
| 1 | துணை வட்டாட்சியர் | நி | 1 | 1 | - | - | **1a** (பொது) | 0 | 1 |
| 2 | முதுநிலை வருவாய் ஆய்வாளர் (உதவியாளர்) | நி | 1 | 1 | - | - | **1b** (பொது) | 0 | 1 |
| | **மொத்தம்** | | **2** | **2** | **-** | **-** | **-** | **0** | **2** |
| ஈ) வட்ட வழங்கல் பிரிவு | | | | | | | | | |
| 1 | துணை வட்டாட்சியர் | நி | 1 | 1 | - | - | - | 1 | 1 |
| 2 | முதுநிலை வருவாய் ஆய்வாளர் (உதவியாளர்) | நி | 1 | 1 | - | - | **1c** (பொது) | 0 | 1 |
| 3 | இளநிலை வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை) | நி | 1 | 1 | - | - | **1e** | 0 | 1 |
| 4 | தனி வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை) | நி | 3 | 1 | 0 (1e) | - | 1 | - | 1 |
| 5 | அலுவலக உதவியாளர் | நி | 1 | 1 | - | - | - | 1 | 1 |
| | **மொத்தம்** | | **7** | **5** | **0** | **-** | **3** | **2** | **5** |
| உ) கிராம நிர்வாகம் | | | | | | | | | |
| 1 | கிராம நிர்வாக அலுவலர் | நி | 66 | 45 | - | - | 21 | - | 21 |
| 2 | கிராம உதவியாளர் | நி | 66 | 45 | - | - | 21 | - | 21 |
| | **மொத்தம்** | | **132** | **90** | **-** | **-** | **42** | **-** | **42** |

| ஊ) நில அளவைப் பிரிவு | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வட்டத்துணை ஆய்வாளர் | நி | 1 | 1 | - | - | - | 1 | 1 |
| 2 | வட்ட சார் ஆய்வாளர் | நி | 1 | 1 | - | - | - | 1 | 1 |
| 3 | குறுவட்ட அளவர் | நி | 6 | 4 | - | - | 2 | - | 2 |
| 4 | முதுநிலை வரைவாளர் | நி | 1 | 1 | - | - | - | 1 | 1 |
| 5 | நில ஆவண வரைவாளர் | நி | 1 | 0 | 1 (***) | - | - | 0 | 0 |
| 6 | புல உதவியாளர் | நி | 1 | 1 | - | 1 | - | 1 | 1 |
| | **மொத்தம்** | | **11** | **8** | **1** | **1** | **2** | **4** | **6** |
| **ஆக மொத்தம் (அ+ஆ+இ+ஈ+உ+ஊ)** | | | **197** | **128** | **8** | **4** | **61** | **17** | **78** |

**(1a)** பொதுப்பிரிவிலிருந்து ஒரு மண்டல துணை வட்டாட்சியர் பதவியை தேர்தல் பிரிவிற்கு மாற்றலாம்.

**(1b)**பொதுப்பிரிவிலிருந்து ஒரு முதுநிலை வருவாய் ஆய்வாளர் (உதவியாளர் நிலை) பதவியை தேர்தல் பிரிவிற்கு மாற்றலாம்.

**(1c)**பொதுப்பிரிவிலிருந்து ஒரு முதுநிலை வருவாய் ஆய்வாளர் (உதவியாளர் நிலை) பதவியை வட்ட வழங்கல் பிரிவிற்கு மாற்றலாம்.

**(1d)**பொதுப்பிரிவிலிருந்து ஒரு இளநிலை வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை) பதவியை சமூக பாதுகாப்புத் திட்டத்திற்கு மாற்றலாம்.

**(1e)** வட்டவழங்கல் பிரிவிலிருந்து வட்ட பிரிவில் உள்ள ஒரு தனி வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை) பதவியை அதே பிரிவில் இளநிலை வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை) பணியிடத்திற்கு மாற்றலாம்.

**(***)** மிகைப் பணியிடங்கள்

<u>மொத்தப் பணியிடங்கள் – 197</u>

| | | |
|---|---|---|
| நிறுத்தி வைக்கப்பட்டப் பணியிடங்கள் | – | 128 |
| மறுபணியமர்த்தல் | – | 61 |
| மிகைப் பணியிடங்கள் | – | 8 |
| மொத்தப் பணியிடங்கள் | | 197 |

<u>புதியதாக தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்கள் – 21</u>

புதிய திருவட்டார் வட்டம் – 17
ஏற்கனவே செயல்பட்டு வரும் கல்குளம் வட்டம் – 4

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு - III

### அரசாணை (நிலை) எண்.40, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 07.02.2019

### ஆட்சி எல்லை பட்டியல்

| வ. எண். | விபரம் | ஆட்சி எல்லை | | | அரசாணை எண். 279, வருவாய்த்துறை, நாள் 9.6.2003–இன்படியான அளவுகோல்கள் |
|---|---|---|---|---|---|
| | | தற்பொழுதுள்ள கல்குளம் வட்டம் | உத்தேசிக்கப்படும் புதிய திருவட்டார் வட்டம் | பிரிவினைக்குப் பின் எஞ்சிய கல்குளம் வட்டம் | |
| 1 | தலைமையிடம் | தக்கலை | செருப்பாலூர் | தக்கலை | |
| 2 | பரப்பளவு (ச.கி.மீட்டரில்) | 595.32 ச.கி.மீ. | 346.03 ச.கி.மீ. | 249.29 ச.கி.மீ. | குறைந்த அளவு 250 ச.கி.மீ அதிக அளவு 2000 ச.கி.மீ |
| 3 | மக்கள் தொகை | 7,03,577 | 1,82,772 | 5,20,805 | குறைந்த அளவு 1,00,000 அதிக அளவு 5,50,000 |
| 4 | வருவாய் கோட்டத்தின் பெயர் | பத்மனாபபுரம் | பத்மனாபபுரம் | பத்மனாபபுரம் | –– |
| 5 | சட்டமன்ற தொகுதி | குளச்சல்<br>பத்மனாபபுரம் | பத்மனாபபுரம் (பகுதி) | குளச்சல்<br>பத்மனாபபுரம் (பகுதி) | –– |
| 6 | பாராளுமன்ற தொகுதி | கன்னியாகுமரி | கன்னியாகுமரி | கன்னியாகுமரி | –– |
| 7 | நகராட்சிகளின் எண்ணிக்கை | குளச்சல்<br>பத்மனாபபுரம் | - | குளச்சல்<br>பத்மனாபபுரம் | –– |
| 8 | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை | 1. தக்கலை<br>2. திருவட்டார்<br>3.குருந்தன்கோடு | 1. திருவட்டார் | 1. குருந்தன்கோடு<br>2. தக்கலை | 2 அல்லது 3 ஊராட்சி ஒன்றியங்கள் |
| 9 | பேரூராட்சிகளின் எண்ணிக்கை | 23 | 6 | 17 | .. |
| 10. | உள்வட்டங்களின் எண்ணிக்கை | 6<br>1.திருவட்டார்<br>2.குலசேகரம்<br>3. தக்கலை<br>4.திருவிதாங் கோடு<br>5.குருந்தன் கோடு<br>6. குளச்சல் | 2<br>1. குலசேகரம்<br>2. திருவட்டார் | 4<br>1. தக்கலை<br>2. திருவிதாங்கோடு<br>3. குருந்தன்கோடு<br>4. குளச்சல் | ... |
| 11 | வருவாய்க் கிராமங்களின் எண்ணிக்கை | 66 | 21 | 45 | குறைந்த அளவு 30 கிராமங்கள் |
| 12 | கிராம பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை | 26 | 10 | 16 | ... |

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு - IV

**அரசாணை (நிலை) எண்.40, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 07.02.2019**

## அறிவிக்கை – I

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கல்குளம் வட்டத்தினை பிரித்து 2019–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 07–ஆம் நாளிலிருந்து செருப்பாலூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதியதாக திருவட்டார் வட்டம் ஒன்று கீழ்க்காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வருவாய் கிராமங்களை தனது ஆட்சி எல்லைகளாக கொண்டு செயல்படும்.

| வட்டத்தின் பெயர் | குறுவட்டத்தின் பெயர் | வரிசை எண். | வருவாய் கிராமத்தின் எண் | வருவாய் கிராமத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| திருவட்டார் (தலைமையிடம் செருப்பாலூர்) | 1.திருவட்டார் | 1 | 7 | மேக்கோடு |
| | (கிராமங்கள்– 13 ) | 2 | 8 | அருவிக்கரை |
| | | 3 | 9 | திருவட்டார் |
| | | 4 | 36 | குமரன்குடி |
| | | 5 | 37 | அயக்கோடு |
| | | 6 | 38 | குலசேகரம் அ |
| | | 7 | 39 | குலசேகரம் ஆ |
| | | 8 | 3 | ஆற்றூர் |
| | | 9 | 19 | வீயன்னூர் அ |
| | | 10 | 29 | செறுகோல் |
| | | 11 | 30 | ஏற்றக்கோடு |
| | | 12 | 58 | வீயன்னூர் ஆ |
| | | 13 | 59 | கண்ணனூர் |
| | 2. குலசேகரம் | 14 | 10 | திற்பரப்பு |
| | (கிராமங்கள்– 8 ) | 15 | 11 | பொன்மனை அ |
| | | 16 | 21 | தும்பகோடு அ |
| | | 17 | 22 | சுருளகோடு |
| | | 18 | 40 | பேச்சிப்பாறை |
| | | 19 | 41 | பொன்மனை ஆ |
| | | 20 | 60 | தும்பக்கோடு ஆ |
| | | 21 | 61 | பெருஞ்சாணி |

புதிய திருவட்டார் வட்டத்தில் உள்ளடக்கும் திருவட்டார், குலசேகரம் ஆகிய குறுவட்டங்கள் மீது தற்போது கல்குளம் வட்டாட்சியர்களால் கையாளப்படும் அதிகாரங்கள் 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 07–ஆம் நாளிலிருந்து திருவட்டார் வட்டாட்சியரால் கையாளப்படும்.

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

அரசாணை (நிலை) எண்.40 வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 07.02.2019

## அறிவிக்கை–II

கல்குளம் வட்டத்தில் வட்டப்பிரிவினைக்கு முன் உள்ள குறுவட்டங்கள் மற்றும் வருவாய் கிராமங்களின் விவரம்

| வட்டத்தின் பெயர் | குறுவட்டத்தின் பெயர் | வரிசை எண். | வருவாய் கிராமத்தின் எண் | வருவாய் கிராமத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| கல்குளம் | தக்கலை | 1 | 4 | தக்கலை |
| | (கிராமங்கள் 9) | 2 | 5 | கல்குளம் |
| | | 3 | 6 | கோதநல்லூர் |
| | | 4 | 20 | வேளிமலை |
| | | 5 | 31 | பத்மனாபபுரம் அ |
| | | 6 | 32 | பத்மனாபபுரம் ஆ |
| | | 7 | 33 | முத்தலக்குறிச்சி |
| | | 8 | 34 | சடையமங்கலம் |
| | | 9 | 35 | குமாரபுரம் |
| | திருவிதாங்கோடு | 10 | 13 | இரணியல் |
| | (கிராமங்கள் 12) | 11 | 18 | திருவிதாங்கோடு |
| | | 12 | 43 | ஆத்திவிளை |
| | | 13 | 44 | நுள்ளிவிளை அ |
| | | 14 | 45 | நுள்ளிவிளை ஆ |
| | | 15 | 57 | திக்கணங்கோடு |
| | | 16 | 1 | கப்பியறை அ |
| | | 17 | 2 | வாள்வச்சகோஷ்டம் அ |
| | | 18 | 26 | கப்பியறை ஆ |
| | | 19 | 27 | வாள்வச்சகோஷ்டம் ஆ |
| | | 20 | 28 | மருதூர்குறிச்சி |
| | | 21 | 56 | முளகுமூடு |
| | குளச்சல் | 22 | 15 | கடியப்பட்டணம் |
| | (கிராமங்கள் 14) | 23 | 16 | மணவாளக்குறிச்சி |
| | | 24 | 25 | லெட்சுமிபுரம் |
| | | 25 | 48 | வெள்ளிச்சந்தை அ |
| | | 26 | 49 | வெள்ளிச்சந்தை ஆ |
| | | 27 | 50 | வெள்ளிமலை |
| | | 28 | 51 | மண்டைக்காடு |
| | | 29 | 17 | குளச்சல் அ |
| | | 30 | 52 | குளச்சல் ஆ |
| | | 31 | 53 | சைமன்காலனி |
| | | 32 | 54 | ரீத்தாபுரம் |
| | | 33 | 55 | செம்பொன்விளை |

//த.பி.பா.//

| | | | | |
|---|---|---|---|---|
| | | 34 | 65 | நெய்யூர் |
| | | 35 | 66 | கல்லுக்கூட்டம் |
| | குருந்தன்கோடு | 36 | 14 | தலக்குளம் |
| | (கிராமங்கள் 10) | 37 | 24 | குருந்தன்கோடு அ |
| | | 38 | 46 | திங்கள்நகர் |
| | | 39 | 47 | கக்கோட்டுத்தலை |
| | | 40 | 64 | குருந்தன்கோடு ஆ |
| | | 41 | 12 | ஆளூர் அ |
| | | 42 | 23 | வில்லுக்குறி அ |
| | | 43 | 42 | ஆளூர் ஆ |
| | | 44 | 62 | வில்லுக்குறி ஆ |
| | | 45 | 63 | வில்லுக்குறி சி |
| | திருவட்டார் | 46 | 7 | மேக்கோடு |
| | (கிராமங்கள்– 13 ) | 47 | 8 | அருவிக்கரை |
| | | 48 | 9 | திருவட்டார் |
| | | 49 | 36 | குமரன்குடி |
| | | 50 | 37 | அயக்கோடு |
| | | 51 | 38 | குலசேகரம் அ |
| | | 52 | 39 | குலசேகரம் ஆ |
| | | 53 | 3 | ஆற்றூர் |
| | | 54 | 19 | வீயன்னூர் அ |
| | | 55 | 29 | செறுகோல் |
| | | 56 | 30 | ஏற்றக்கோடு |
| | | 57 | 58 | வீயன்னூர் ஆ |
| | | 58 | 59 | கண்ணனூர் |
| | குலசேகரம் | 59 | 10 | திற்பரப்பு |
| | (கிராமங்கள்– 8 ) | 60 | 11 | பொன்மனை அ |
| | | 61 | 21 | தும்பகோடு அ |
| | | 62 | 22 | சுருளகோடு |
| | | 63 | 40 | பேச்சிப்பாறை |
| | | 64 | 41 | பொன்மனை ஆ |
| | | 65 | 60 | தும்பக்கோடு ஆ |
| | | 66 | 61 | பெருஞ்சாணி |

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

7/2/19

அரசாணை (நிலை) எண்.40, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 07.02.2019

## அறிவிக்கை–III

கல்குளம் வட்டத்தில் வட்டப்பிரிவினைக்கு பின் உள்ள குறுவட்டங்கள் மற்றும் வருவாய் கிராமங்களின் விவரம்

| வட்டத்தின் பெயர் | குறுவட்டத்தின் பெயர் | வரிசை எண். | வருவாய் கிராமத்தின் எண் | வருவாய் கிராமத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| கல்குளம் | தக்கலை | 1 | 4 | தக்கலை |
| | (கிராமங்கள் 9) | 2 | 5 | கல்குளம் |
| | | 3 | 6 | கோதநல்லூர் |
| | | 4 | 20 | வேளிமலை |
| | | 5 | 31 | பத்மனாபபுரம் அ |
| | | 6 | 32 | பத்மனாபபுரம் ஆ |
| | | 7 | 33 | முத்தலக்குறிச்சி |
| | | 8 | 34 | சடையமங்கலம் |
| | | 9 | 35 | குமாரபுரம் |
| | திருவிதாங்கோடு | 10 | 13 | இரணியல் |
| | (கிராமங்கள் 12) | 11 | 18 | திருவிதாங்கோடு |
| | | 12 | 43 | ஆத்திவிளை |
| | | 13 | 44 | நுள்ளிவிளை அ |
| | | 14 | 45 | நுள்ளிவிளை ஆ |
| | | 15 | 57 | திக்கணங்கோடு |
| | | 16 | 1 | கப்பியறை அ |
| | | 17 | 2 | வாள்வச்சகோஷ்டம் அ |
| | | 18 | 26 | கப்பியறை ஆ |
| | | 19 | 27 | வாள்வச்சகோஷ்டம் ஆ |
| | | 20 | 28 | மருதூர்குறிச்சி |
| | | 21 | 56 | முளகுமூடு |
| | குளச்சல் | 22 | 15 | கடியப்பட்டணம் |
| | (கிராமங்கள் 14) | 23 | 16 | மணவாளக்குறிச்சி |
| | | 24 | 25 | லெட்சுமிபுரம் |
| | | 25 | 48 | வெள்ளிச்சந்தை அ |
| | | 26 | 49 | வெள்ளிச்சந்தை ஆ |
| | | 27 | 50 | வெள்ளிமலை |
| | | 28 | 51 | மண்டைக்காடு |
| | | 29 | 17 | குளச்சல் அ |
| | | 30 | 52 | குளச்சல் ஆ |
| | | 31 | 53 | சைமன்காலனி |
| | | 32 | 54 | ரீத்தாபுரம் |
| | | 33 | 55 | செம்பொன்விளை |
| | | 34 | 65 | நெய்யூர் |
| | | 35 | 66 | கல்லுக்கூட்டம் |
| | குருந்தன்கோடு | 36 | 14 | தலக்குளம் |
| | (கிராமங்கள் 10) | 37 | 24 | குருந்தன்கோடு அ |

//த.பி.பா.//

| | | | | |
|---|---|---|---|---|
| | | 38 | 46 | திங்கள்நகர் |
| | | 39 | 47 | கக்கோட்டுத்தலை |
| | | 40 | 64 | குருந்தன்கோடு ஆ |
| | | 41 | 12 | ஆளூர் அ |
| | | 42 | 23 | வில்லுக்குறி அ |
| | | 43 | 42 | ஆளூர் ஆ |
| | | 44 | 62 | வில்லுக்குறி ஆ |
| | | 45 | 63 | வில்லுக்குறி சி |

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

7/2/19

பிரிவு அலுவலர்.

7/2/19